DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.206/2024**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அருள்குமார் | | : |
| த/பெ | : சேகர் | மதம் | : |
| கிராமம் | : அயனாவரம் | தொழில் | : - |
| வட்டம் | : சென்னை | வயது | : 37/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 16.02.2026**

**<u>குறுக்கு விசாரணை : </u>Pw1**

எதிரியின் தம்பி பிரசன்னா எனது கல்லூரி நண்பர் என்றால் சரிதான். பிரசன்னா என்னிடம் கடன் வாங்கியிருந்தார் என்றால் அவருடன் அப்பா மற்றும் எதிரி இருந்தார். கடன் வாங்கிய சமயத்தில் பிரசன்னாவுடன் அப்பா மற்றும் எதிரி இருந்த விவரத்தை புகார் மனுவில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல தெரிவித்துள்ளேன். 2005 ஆம் ஆண்டு கல்லூரியில் படித்த காலகட்டத்தில் இருந்தே எதிரியின் தம்பி பிரசன்னாவுடன் எனக்கு பணபரிவர்த்தனை இருந்து வந்தது என்றால் சரிதான். நான் நேரடியாக எதிரிக்கு கடன் கொடுத்தேனா என்றால் இல்லை. எதிரி நேரடியாக பணம் வாங்கவில்லை என்று கூறும் போது அவருக்கு நேரடி கடப்பாடு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் புகார் தந்தபோது எதிரி தான் காசோலையை காவல் நிலையத்தில் வைத்து கொடுத்தார். என்னிடம் வாங்கிய கடனை பிரசன்னா தவணை முறையில் செலுத்தி வந்தார் என்றால் சரிதான். வழக்கு காசோலையில் எனது பெயரை நான் தான் எழுதினேன் என்றால் சரிதான். காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து இவ்வழக்கு காசோலையை எதிரியின் தந்தை

என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல, எதிரி தான் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது நான் தான். அந்த புகைப்படத்தில் எதிரியின் தந்தையிடம் காசோலை வாங்குவதாக காணப்படுகிறது என்றால் சரிதான். அந்த புகைப்படம் உடன் இணைக்கப்பட்ட சட்டப்பிரிவு 63 BSA சான்றிதழ் **(எ.ம.சா.ஆ.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி நேரடியாக என்னிடம் வழக்கு காசோலை தரவில்லை என்று எ.ம.சா.ஆ.1 மூலம் தெரியவருகிறது என்றால் எதிரியின் குடும்பத்தார் அனைவரும் அங்கு தான் இருந்தார்கள். அந்த புகைப்படத்தை எதிரி தான் எடுத்தார்.

எதிர் தரப்பு வழக்கறிஞர் காலஅவகாசம் கேட்டதின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K